


# கடவுளும் மனிதனும்

தந்தை பெரியார்



# கடவுளும் மனிதனும்

தந்தை பெரியார்

பெரியார் சுயமரியாதைப்
பிரச்சார நிறுவன வெளியீடு
பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை - 600 007.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | கடவுளும் மனிதனும் |
| ஆசிரியர் | : | தந்தை பெரியார் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு : 1973<br>எட்டாம் பதிப்பு : 2020 |
| நூல் அளவு | : | டெம்மி (140 mm x 220 mm) |
| அச்சு எழுத்து அளவு | : | 12 points |
| பக்கங்கள் | : | 32 |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| நன்கொடை<br>(குறைந்த அளவு) | : | ரூ.25/- |
| வெளியீடு மற்றும்<br>உரிமை | : | **பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு**<br>சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சிட்டோர் | : | 'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம்<br>● பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,<br>வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163<br>● பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-2771815<br>www.dravidianbookhouse.com |

# கடவுளும் கடவுள் தன்மையும்

1. கடவுளைக் கற்பித்தவன் அறிவிலி.

2. அதற்குக் குணம் கற்பித்தவன் அயோக்கியன்.

3. அதைப் பின்பற்றுகிறவர்கள் மேற்கண்ட இரு தன்மையினையும் சேர்ந்தவர்கள்.

முதலாவதாக கடவுளைக் கற்பித்தவன் அறிவிலி என்று ஏன் சொல்லவேண்டி வந்தது என்றால்,

மனிதனின் உலகத் தோற்றத்திற்கும், அதன் இருப்புக்கும், நடப்புக்கும், மறைவுக்கும் காரணம் என்ன என்று தேடும்போது, பிரத்தியட்சத்தில் நடைபெறும் இந்தக் காரணங்கள் ஒரு மனிதனால் நடைபெறுகின்றது என்பதை எப்படிக் கண்டானோ, அதை ஆதாரமாய்க் கொண்டே தனக்கு விளங்கிக்கொள்ள முடியாமல் இருந்து வருகிற தோற்றம், இருப்பு, நடப்பு, மறைவு (அழிவு) காரியங்களுக்கும் யாரோ ஒரு நபர் இருந்துதான் அவரால் அக்காரியங்கள் நடைபெறுகின்றன என்று ஊகித்துத் திருப்தி அடைந்துகொண்டான்.

அதனாலேயேதான் இன்றும் சாதாரணமாகப் பேசும் மூன்றாம்தர அறிவாளியும் "கடவுள் இல்லை என்றால் நீ எப்படிப் பிறந்தாய்?" "வீடுதான் மனிதன் கட்டுகிறான்; மலை, சமுத்திரம், ஆறு, மலையில் மரஞ்செடி ஆகியவைகள் எப்படி உண்டாயிற்று? இவைகட்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா? என்று கூறிக் கடவுளை மெய்ப்பிக்க வருகிறான்.

## அறிவுத் தெளிவில்லாதவர்கள் யூகமே கடவுள்

ஆகவே, சமாதானம், காரணகாரியம் சொல்ல முடியாதவைகளுக்குக் "கடவுள் செயலைச் சொல்லி விடுகிறான்.

ஆகவே, கடவுள் அறிவுத் தெளிவு இல்லாத இடத்திலிருந்தே தோற்றுவிக்கப்படுகிற ஓர் யூகப்பொருளாகவே (அதாவது முடிந்த முடிவாய் இல்லாமல் நினைத்துக் கொள்ளுகிற பொருளாகவே) கண்டுபிடித்தவனாகிறான். இதனாலேயே எந்த மனிதனும் தனது சாதாரண அறிவுக்குக் காரணம் தெரியமுடியாத விஷயங்களுக்கு மேற்கொண்டு ஆராய்ச்சி அறிவைப் பயன்படுத்த அவசியமில்லாதவனாகிச் சவுகரியமான முடிவுக்கு வர வசதி கிடைத்துவிட்டபடியால், மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு -ஆராய்ச்சி முயற்சிக்கு அவசியமில்லாமலேயே போய் மனிதன் பெரும்பாலானவர்களின் அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சி முயற்சியும் தடைப்பட்டுவிட்டது.

இதனால்தான் கடவுள் நம்பிக்கைக்காரர் எவரையும் பகுத்தறிவில்லாதவர்கள் என்று முடிவு செய்ய வேண்டியதாயிற்று.

மனித அறிவுக்கு எவ்வளவு சக்தி இருந்தாலும், அது பயன்படுத்தும் அளவுக்குத்தான் சக்தி காணமுடியும்.

உதாரணமாக,

**எனது அனுபவம்**

எனது 70-75 ஆண்டுகளுக்கு முந்தி நான் கண்ட அனுபவம் ஒன்றைச் சொல்லுகிறேன்:

அப்பொழுதே ஈரோடு முனிசிபல் நகரத்தில் முனிசிபல் ஆஸ்பத்திரி ஒன்று இருந்தது. நாட்டு வைத்தியர்கள 2,3 பேர்களும் கிறிஸ்துவ உபதேசியார் ஒரு வைத்தியரும் இருந்தார்கள். வருடம் தவறாமல் ஈரோட்டிற்கு 2 தரம் காலரா (விஷபேதி) நோய்வரும், ஈரோடு ஜனத்தொகை அன்று சுமார் 15000-க்கும் குறையாமல் இருந்தாலும், அந்தக் காலரா வியாதியால் ஆண்டொன்றுக்கு 300 பேருக்குக் குறையாமல் சில ஆண்டுகளில் 500 பேருக்குக் குறையாமல் சில ஆண்டுகளில் 500 பேர்களும் சாவார்கள். காலரா நோய் என்பது “ஓங்காளியம்மன் (ஓம்காளி அம்மன்) என்னும் ஒரு துஷ்ட தேவதையின் விளையாட்டு” என்றே அக்கால மக்கள் கருதி, காலரா வந்தவர்களுக்கு வைத்தியமே செய்ய மாட்டார்கள்; வைத்தியம் செய்தால், “ஆதிதான் (ஓங்காளி அம்மன்) கோபித்துக்கொள்ளுவாள்” என்று கருதி, வைத்தியம் செய்தாலும் கோபித்துக்கொள்வார்கள்; நோய் வந்து ஒரு மாதம் ஒன்றரை மாதம் ஆகி, அது தானாகவே குறைந்து, தினம் இரண்டு ஒன்று சாவு

திட்டத்திற்கு வந்த பிறகு, ஓங்காளியம்மனுக்குப் பொங்கல் வைத்து விழாக்கொண்டாடி, அந்தப்படி விழாக் கொண்டாடியதால் அம்மன் மகிழ்ச்சி அடைந்து விலகிவிட்டாள் என்பார்கள். இதற்குள் ஊரில் சில பெண்கள் மீதும், சில ஆண்கள் மீதும் "அம்மன் வந்து மக்களை மிரட்டுவாள். "என்னை இப்போது நீங்கள் சட்டை செய்வதில்லை. நான் விளையாடினால், பொங்கல் வைக்கிறீர்கள்; இல்லாவிட்டால், மறந்து விடுகிறீர்கள். உங்களை ஒழித்துக் கட்டிவிடுகிறேன்" என்று "சொல்லுவாள். குடிமக்கள் பயந்தது போல நடித்து, அம்மனுக்கு உடனே பொங்கல் விழாக் கொண்டாடுவதாக வாக்குக் கொடுப்பார்கள்.

பிறகு ஒரு வாரத்தில் காலரா நின்றுவிடும்.

### முனிசிபாலிட்டி எச்சரிக்கை

இதன் மத்தியில் முனிசிபாலிட்டியார் "வாய்க்கால் தண்ணீரைக் குடிக்காதீர்கள், எந்தத் தண்ணீரையும் காய்ச்சி வெந்நீராக்கிக் குடியுங்கள். பழையது சாப்பிடாதீர்கள். தெருக் கடைகளில் புட்டு (இட்டிலி) பலகாரம் வாங்கிச் சாப்பிடாதீர்கள் என்று தண்டோரா போட்டு வாய்க்காலில் காலரா வந்த பாய், துணிகள் துவைக்காமல் காவல் போடுவார்கள்.

### 'காலரா' பற்றிய மவுடீகம்

இதன் மத்தியில் சில பெண்கள் மீது ஆத்தாள் வந்து, "நான் இரண்டு குடம் பேதி எண்ணெய் கொண்டுவந்தேன். ஒன்றரைக் குடம்தான் செலவு செய்தேன். மீதியை நீங்களே எடுத்துக்கொண்டுபோய் அடுத்த கிராமத்தில் வைத்து விடுங்கள். நான் போகிறேன்.... போகிறேன்....." என்று சொல்லிவிட்டுச் சாமி விலகிவிடும். பிறகு பொங்கல் வைப்பது, வேல் எடுத்து ஊர் சுற்றி வருவது; ஓர் இரவில் ஊரில் உள்ள பழைய பாய், சட்டி - பானை, கந்தல் துணி ஆகியவைகளைப் பலர் எடுத்துக்கொண்டு போய் அடுத்த கிராம எல்லைதாண்டி வைத்துவிட்டு வந்துவிடுவார்கள். இதனாலேயே பெண்கள் யாரையாவது வசை கூறுவதானால் "உனக்கு ஓங்காளி ஒரு கரண்டி எண்ணெய் கொடுக்கமாட்டாளா?" என்றுதான் வைவார்கள். ஏன் எண்ணெய் என்கிறார்கள் என்றால், எண்ணெய் சாப்பிட்டால், பேதி ஆவது பிரத்தியட்சம், ஆனதால், எண்ணெயைச் சொல்வார்கள். இந்தப் பேதி (காலரா) நோயினால் சில கிராமங்களில் 100க்கு 75 மக்கள் இறந்துவிடுவார்கள். வைத்தியமே செய்யமாட்டார்கள்; நோய்க்கான காரணம் அறியத் தொடங்க மாட்டார்கள்.

## உற்சவங்களால் நோய் பரவும் கேடு

இந்த மாதிரி நோய்வரக் காரணம், அந்த மாதங்கள் உற்சவ காலம். பல ஊர்க்காரர்கள் வந்து ஓர் ஊரில் கூடுவது உற்சவ அறிகுறி - கண்டபடி சாப்பிடுவது; கண்ட இடத்தில் அசிங்கம் செய்வது; வாய்க்கால் ஓரத்தில் இருக்கும் ஊர்களின் ஜலதாரைக் கசுமாலத் தண்ணீர் வாய்க்காலில் விழுவது, அந்தத் தண்ணீரைக் குடிப்பது; தூக்கம் கெடுவது; ஆடு, கோழி, பன்றி மாமிசங்களைச் சரிவர வேக வைக்காமல் தின்பது போன்ற காரியங்களும், மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்கள் மாரியின் பண்டிகை; சீரங்கம் ஏகாதசி, தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம் ஆகியவைகளிலும் பழனி உற்சவம் முதலியவைகளிலும் பெரிதும் சாதாரண பாமர மக்கள் அதிகம் போக்குவரத்துக் காரணமாய் ஆங்காங்கு நோய் பற்றியும், அம்மக்கள் வழிப் பயணத்தில் அடைந்த பலவீனம் - அசவுகரியம் காரணமாய்த் தங்கும் இடங்களில் நோய்க் கிருமிகள் பரவி, பல வழிகளில் மக்களைப் பற்றும்படி ஆகிவிடுகிறது. இதை 70-75 ஆண்டுக்கு முற்பட்ட பாமர மக்கள் உணர முடியாமல் போய் இதற்குக் கடவுள் காரணம் என்று கருத வேண்டியதாய் விட்டது.

70-75 ஆண்டுகளுக்கு முன்னைய நிலையே இப்படி இருந்திருக்குமானால், 100 - 200 - 500 - 1000 ஆண்டுகளுக்கு முன்னுள்ள கடவுள் உணர்ச்சிகளால் மக்கள் மடையர்களாய், ஆலோசனை அற்றவர்களாக ஆகி இருப்பது என்பது தவறாக இருக்க முடியுமா?

## சுகாதார முறையால் "காலரா" சாவு குறைந்தது

எனவே, காலரா - பேதி விஷயத்தில் இந்தக் கடவுள் நம்பிக்கை மாறி, வைத்தியம் செய்து காப்பாற்ற முடிகிறது என்பதோடு, காலராவின் காரணம் கண்டுபிடித்து, ஆங்காங்கு வாய்க்கால் தண்ணீர், குளத்துத் தண்ணீர் கிணற்றுத் தண்ணீர் என்கின்ற தன்மைகளை மாற்றிக் குழாய்த் தண்ணீர், வடி கட்டிய தண்ணீர் என்கின்ற தன்மைகளையும், மக்களுக்குச் சொல்லி, சுகாதார முயற்சிகளைக் கையாண்டு வருவதால், 70 ஆண்டுகளுக்கு முன்பு 15,000 பேர் உள்ள நகரத்தில் (ஈரோட்டில்) காலராவால் ஆண்டு ஒன்றுக்கு 250 - 300 பேர் செத்துவந்த ஒரு நிலை மாறி, இன்று 70,000 (எழுபது ஆயிரம்) பேர் உள்ள (ஈரோடு) நகரில் ஆண்டு ஒன்றுக்கு 20-30 பேர்கூட காலராவால் சாவது இல்லை என்கிற நிலை ஏற்பட்டு வருகிறது.

### “கடவுள் செயல் நம்பிக்கையும் குறைந்துவிட்டது

ஆகவே, கடவுள் நம்பிக்கை மக்களிடம் மாறவில்லை என்றாலும், கடவுள் செயல், தன்மை வெகுதூரம் மாறிவிட்டது.

இதிலிருந்தே கடவுள் நம்பிக்கையும், கடவுள் செயலில் நம்பிக்கையும் மக்களை எவ்வளவு தூரம் மடையர்களாக, அறிவிலியாக ஆக்கி வந்தது என்பதைக் கடவுள் நம்பிக்கையிலும் கடவுள் செயல் தன்மை நம்பிக்கையிலும் ஏற்பட்ட மாறுதல் காரணமாய் மனித சமுதாய வாழ்வில் எவ்வளவு நலம் ஏற்பட்டதோடு, அறிவுத் தெளிவு எவ்வளவு வளர்ந்து வருகிறது என்பதையும் உணரலாம். மேல்நாட்டவர்கள் கடவுளை நம்புகிறார்களே ஒழிய, கடவுள் செயலை நம்புவது குறைந்துகொண்டே வருகிறது.

அதாவது, “கடவுளை நம்பு; குதிரையைக் கட்டிவை” இது முகமதியர்கள் கடவுள் நம்பிக்கை .

ஆகவே, இவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்வது, அறிவாளிக்குக் கடவுள் நம்பிக்கை - சும்மா - அதாவது, மனிதன் சுற்றுச் சார்பு பார்த்து வேஷ்டி கட்டிக் கொள்வது போன்றதே ஒழிய, உணவு உட்கொள்ளுவது போன்றதல்லவென்பதாகும். ஆனால், இதற்கு விரோதமாக உண்மையாகவே யாருக்காவது கடவுள் நம்பிக்கை இருக்குமானால், அவன் மரக்கட்டையாகத்தான் இருக்க முடியும். மற்றும், அப்படிப்பட்டவர் நம்மைப் பார்த்துக் கடவுள் ஒருவர் இருக்கிறார்; அதை நம்பு என்றுகூடச் சொல்ல வரமாட்டார்; அதை நிரூபிக்கக்கூட நினைக்கமாட்டார் என்பதுதான். ஆகவே, கடவுள் கற்பனை அறிவிலியிடம் இருந்து தோன்றியது என்கிறேன்.

### கடவுளைக் கற்பித்தவன் அயோக்கியன்

மற்றும், இரண்டாவதாக, அதற்கு (கடவுளுக்கு) உருவம், குணம் கற்பித்தவன் அயோக்கியன். அதாவது, அயோக்கியத்தனம் என்று சொன்னேன். ஏன்?

கடவுளுக்கு இலக்கணம் சொன்னவன், கடவுள் உருவமற்றவர் - குணமறிபவர் - எங்குமிருப்பவர் - எல்லாமுமாயிருப்பவர் - அன்புமயமானவர் - கருணை வடிவானவர் என்று இப்படியாக அடுக்கிக் கொண்டே போகிறார்கள். இவர்களை நான் அறிவிலிகள் என்று சொல்ல முடியுமோ? அறிவிலி என்பது சில காரணம் தெரிந்துகொள்ள முடியாததனால் திருப்தி அடைவதற்கு ஆகச்

சொன்னது ஆகும். இவன் அதற்கு இலக்கணம் சொல்ல வந்தவன் வேண்டுமென்றே மக்களை ஏய்க்க வந்தவன்!

கடவுள் உண்டு என்று ஒரு பைத்தியக்காரன் சொன்னால், இவன் கடவுளைப் பார்த்ததுபோல், "ஆமாம், நான் அவரைப் பார்த்தேன்; அடையாளம் என்ன என்றால், அவருக்கு (கடவுளுக்கு) உருவமில்லை" என்கிறான். உருவமில்லாமலேயே உண்டு என்று உணர்ந்து கொள்ளக்கூடிய வஸ்துக்கள் சில இருக்கின்றன; ஆனால், அவன் மனிதனுடைய பஞ்சேந்திரியங்களில் (அய்ந்து உறுப்புகளில்) (அதாவது மெய் (உடல்) வாய் கண், மூக்கு, செவி, (காது) ஆகிய அய்ந்து உறுப்புகளில்) ஏதாவது ஓர் உறுப்புக்காவது உணர்த்தப்படக் கூடியதாக இருக்கும். உதாரணமாக காற்று நம் கண்களுக்குத் தெரியாது என்றாலும், உடலில் படும்போது, சாமான்களை அசைக்கச் செய்யும்போது முறையே உடலுக்கும் கண்களுக்கும் தெரிகிறது. மின்சாரம் (எலெக்ட்ரிசிடி) என்பதாக ஒரு வஸ்து இருக்கிறது; அது கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால், அது செயல்படும்போது, அநேக காரியங்களை உடல் மூலம் அறிகிறோம். காற்றுப்போலவே மின்சாரம் உடலில் பட்டால், அது படுவதைப் பல வழிகளில் உணர்கிறோம். நம் இஷ்டப்படி அதைத் தொழில்படுத்துகிறோம். ஒரு முனையை (பொத்தானை) அழுத்துவது மூலம் பல காரியங்களைச் செய்யச் செய்கிறோம்; அதை அளவுப்படுத்துகிறோம்; இது போல் குணங்களை அறிகிறோம்.

## மாபெரும் புரட்டு

ஆகவே, உருவமில்லாமல் குணமில்லாமல் ஒரு வஸ்து இருக்கிறது என்றால், அதைவிட யோக்கியமற்ற காரியம் வேறு என்ன இருக்கமுடியும்? இந்த யோக்கியமற்ற காரியத்தை ஒருவன் செய்கிறான் என்றால், அதை அயோக்கியம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்? இப்படிப்பட்ட காரியம் செய்வதன் கருத்தெல்லாம் மற்றொரு மனிதனை நம்பச் செய்வதற்காகச் செய்யும் ஏமாற்றும் உணர்ச்சியல்லாமல் இதில் வேறு என்ன யோக்கியமிருக்க முடியும்? நம்புகிற மனிதன் மடையனாக்கப்படுவதுடன், இதுபோல அநேக பித்தலாட்டங்களையும், அயோக்கியத்தனங்களையும் நம்பும்படியான ஏமாளியாக ஆகிவிடுகிறான்.

இது எவ்வளவு பெரிய புரட்டு? உருவமில்லை; குணம் இல்லை என்பது மாத்திரமல்லாமல் அந்த வஸ்து (கடவுள்) எங்கும் இருக்கிறார்

என்கின்ற மற்றொரு இமயமலைப் புரட்டு என்றால், இந்தத் துணிவுக்கு என்ன பெயர் இடுவது?

இதையெல்லாம் விட பெரிய அயோக்கியத்தனம் என்னவென்றால், "என்ன அய்யா! என்னென்னமோ சொல்லுகிறாயே, இவை ஒன்றும் எனக்குப் புரியமாட்டேன் என்கிறதே, என் அறிவுக்கு எட்டமாட்டேன் என்கிறதே" என்றால்,

"அது (கடவுள்) எப்படிப்பட்ட மனத்திற்கும் எட்டாதது; எப்படிப்பட்ட அறிவுக்கும் அறியக்கூடாதது. ஆதலால், உனக்குப் புரியவும் புரியாது; உன் மனத்திற்கு எட்டவும் எட்டாது; நீ அதனை அறியவும் முடியாது. அதனால்தான் கடவுள் உருவமற்றவர், குணமற்றவர், யார் மனத்துக்கும் புரியாதவர், எப்படிப்பட்ட அறிவாளியின் அறிவுக்கும் எட்டாதவர் என்று சொல்லப்படுகிறது என்றால், இது கட்டுப்பாடான அயோக்கியத்தனமா - அல்லவா?

இப்படிப் புரியாதவர், எட்டாதவர், அறியப்படாதவர் உனக்கு மாத்திரம் எப்படிப் புரிய, எட்ட, அறிய, தெரிய முடிந்தது?

தோழர்களே! இந்தக் கேள்வியை நீங்களே கடவுள் நம்பிக்கைக்காரர்களிடமும், அதை அறிந்தவர்களிடமும் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். அப்படித் தெளிவு கொள்ளாவிட்டால், நீங்கள் மேற்கண்ட 3ஆவது வகுப்பில் சேர்ந்தவர்களாகத்தான் ஆவீர்கள்.

## கடவுள்

மதமும் கடவுளும் மனிதனை முட்டாளாக்கும் கருவிகள்.

மனிதனுக்குள் கடவுளைப் புகுத்துவது மனிதனை முட்டாளாக்கும் டானிக் (வைட்டமின் - சத்து) ஆகும். இதை இன்று பார்ப்பனர்கள், சங்கராச்சாரிகள் கடவுள் பிரச்சாரம் செய்வதில் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் இருந்தே தெரிந்து கொள்ளலாம்.

கடவுள் மனித நலத்துக்காகக் கண்டுபிடித்த சாதனம் அல்ல; மனிதனை முட்டாளாக்குவதற்குப் பயன்படுத்தும் சாதனமேயாகும் சூரியனை, சந்திரனை, நெருப்பை, நீரை, காற்றை, கல்லை, மண்ணை எந்த மனிதனும் கண்டு பிடிக்கவில்லை. அவற்றின் பெயர்களைத்தான் மனிதன் தெரிந்துகொண்டான்.

இவற்றிற்கு விளக்கம் தேவை இல்லை; காரண காரியங்கள் தேவை இல்லை. மனிதன் என்றால் இவைகளை அறிந்தே ஆகவேண்டும்; இவற்றின் பலனை அனுபவித்தே ஆகவேண்டும்.

ஆனால் கடவுளை, அப்படி அல்ல; ஒருவன் சொல்லி, அதுவும் சொல்லுவது மாத்திரமல்ல; நம்பும்படி செய்து, நம்பும்படி செய்வது மாத்திரமல்ல; நம்பும்படி கட்டாயப்படுத்தி மனித மூளைக்குள் புகுத்தி ஆகவேண்டும்.

இந்தக் கதி சர்வசக்தியுள்ள "கடவுளுக்கு" ஏற்பட்டது. பரிதாபம்! மகா மகா பரிதாபம்!!

கடவுள் கதை ஒரு முட்டாளுக்குத் தோன்றிய தோற்றம்! இது உலக அறிவையே பாழாக்கிவிட்டது. அதாவது, சிறு குழந்தை கையில் கிடைத்த நெருப்புப் பந்தம் வீட்டையே - ஊரையே எரித்துச் சாம்பலாக்கியது என்பது போல, கடவுள் எண்ணம் அறிவையே கொன்றுவிட்டது என்று சொல்லலாம்.

கடவுள் என்பது "பிடிக்குப் பிடி நமசிவாயம்" (நமசிவாயம் என்றால், இங்கு ஒன்றும் இல்லை; சூனியம் என்பதுதான் பொருள்).

அது 'கடவுள் என்றால் ஒரு சக்தி' 'சக்திகூட அல்ல' 'ஒரு காரணம் காரணப் பொருள்' காரணப் பொருள்கூட அல்ல அப்படி நினைப்பது - நினைத்துக் கொள்ளுவது மனிதனுக்கு ஒரு 'சாந்தி' என்பதாக கா. சு.வும் (எம்.எல்.பிள்ளை ). திரு வி.க.வும் சொன்ன விளக்கம். இதைப் பழைய 'குடிஅரசு' இதழில் காணலாம். ஆனாலும், இவர்கள் விக்கிரக பூசையும், பட (உருவ) பூசையும் செய்து வந்தவர்கள். கடைசியாக மாற்றிக்கொண்டார்கள்.

## மனிதர்க்குக் கடவுள் அவசியமா?

மனிதனுக்கு எதற்காகக் கடவுள் தேவைப்பட்டது? என்பது எனக்கு இன்னமும் விளங்கவில்லை. அதிலும் கடவுளை நம்பும் எவனும் அதன் சர்வ சக்தியில் நம்பிக்கை வைப்பதே இல்லை; எவனும் சம்பிரதாயத்திற்காக "கடவுள் செயல் என்றானே தவிர, காரியத்தில் மனிதன் செயல் என்றும், தன் செயல் என்றும், இயற்கை என்றும், அகஸ்மாத், தற்சம்பவம், ஆக்சிடெண்ட் என்றும்தான் முடிவு செய்துகொண்டவனாகிறான்.

சர்வம் கடவுள் செயல் என்று சொல்லுகிற எவனும் சர்வத்திற்கும் தற்காப்பு செய்துகொள்ளாமல் இருப்பதில்லை. சர்வம் கடவுள் செயலாயிருக்கும் போது நாஸ்திகன் - கடவுள் இல்லை என்பவன் - எப்படித் தோன்றினான்? என்பதுபற்றிச் சிந்திப்பதில்லை.

மற்றும் சர்வத்திலும் வியாபகமாக இருக்கிற கடவுள் மக்களுக்கு ஏன், தான் இருப்பதாக, தன்னைத் தானாகத் தெரிந்துகொள்ளச் செய்ய முடியவில்லை? என்பதைச் சிந்திக்க மாட்டேன் என்கிறான்!

**அறிவுக்கு எட்டாததாயிற்றே கடவுள்?**

கிறிஸ்துவப் பாதிரி இந்தக் கேள்விக்குப் பதிலாகக் "கடவுள் மனிதனுக்கு அறிவைக் கொடுத்துவிட்டான். அந்த அறிவைக் கொண்டு கடவுளைத் தெரிந்துகொள்ள வேண்டியது மனிதன் கடமை" என்று சொல்லிவிட்டார்.

"உன் அறிவுக்கு எட்டிய கடவுள் என் அறிவுக்கு ஏன் எட்டவில்லை?" என்று கேட்டதற்கு "பாபஜன்மங்களுக்கு எட்டாது" என்று சொல்லிவிட்டார்.

"அந்தப் பாப ஜன்மங்களை யார் படைத்தது? படைத்தது கடவுளானால், பாப ஜன்மங்களை ஏன் படைத்தார்? கடவுள் பாபஜன்மங்களைப் படைக்க வில்லையானால், பாப ஜன்மங்களைப் படைத்தது யார்?" என்று கேட்டேன்.

**கடவுள்' செயலைச் சாத்தான்' ஏற்றதேன்?**

"சாத்தான் படைத்தான்'' என்றும் மற்றும் அவருக்கே புரியாத எதையெதையோ யோசித்து யோசித்துப் பேசினார்.

இஸ்லாத்தின் கதியும் இப்படித்தான் - இந்துவின் கதியோ மும்மூர்த்திகள், ஓங்காளி, மாரி, காத்தவராயன், மதுரைவீரன், கருப்பண்ணன், ஆழ்வார்கள், நாயன்மார்கள், செத்துப்போன பலர், சமாதிக் கல்லுகள், படங்கள், பட்சிகள், மிருகங்கள், மரங்கள் சாணி (முட்டை உருவ) உருண்டைகள், செத்துப்போன மனிதர்கள் முதலிய எத்தனையோ பண்டங்கள் கடவுளாக வணங்கத்தக்கவர்களாகவும் இருந்து வருகின்றன.

இவைகளை ஏன் சொல்லுகிறேன் என்றால், ஒரு சர்வ சக்தியுள்ள கடவுளுக்குத் தன்னைப்பற்றித் தெரிவித்துக் கொள்ள, தன் உருவத்தை விளக்கச் சக்தி இல்லை என்பதைக் காட்டத்தான்.

பிறகு - முன் ஜன்மம், பின் ஜன்மம், கருமம், விதி, நரகம், சொர்க்கம், வைகுண்டம், கைலாசம் - இப்படி இன்னும் பல பைத்தியக்காரனுக்கு 'கள்' ஊற்றினதுபோல் உளறல் மேல் உளறல்கள்.

மனிதனுக்குப் பிறப்புமுதல் சாவுவரை எத்தனையோ துன்பமும், தொல்லையும் இருக்க, இந்தக் கடவுள், கருமம், மோட்ச - நரகத் தொல்லைகள் ஒருபுறம் மனிதனைச் சித்திரவதை செய்கிறது. மனிதன் (ஜீவகோடிகள்) பிறப்புக்கும் வாழ்க்கைக்கும் சாவுக்கும் இடையில் அனுபவிக்கும் இன்பம், துன்பம், கவலை, தொல்லை முதலிய காரியங்களுக்கு அவசியம் என்ன? காரணம் என்ன? என்பதை எவனாலும் இதுவரை தெரிந்துகொள்ள முடியவில்லையே! இத்தனைக்கும் மனிதன், கழுதை, குதிரை, நாய், நரி, எருமை, யானை, புலி, சிங்கம், ஈ, எறும்பு முதலான எண்ணிறந்த ஜீவராசிகளைவிட அதிகமான அறிவு (பகுத்தறிவு) படைத்தவனாவான்.

இந்தப் பகுத்தறிவின் பயனால்தான் மற்ற ஜீவப் பிராணிகளுக்கு இல்லாத தொல்லையை மனிதன் அனுபவிக்கிறான். காரணம் இந்தப் பாழாய்ப்போன கடவுளால்தான் அதிகத் தொல்லை என்பேன்.

“உள்ளதைப் பங்கிட்டு உண்பது” “உழைப்பைப் பங்கிட்டுச் செய்வது” என்ற நிலை ஏற்பட்டால், கடவுளுக்கு வேலையோ அவசியமோ இருக்காது.

இப்போது கையில் வலுத்தவன் காரியமாகவும், அயோக்கியன் ஆதிக்கமாகவும் இருப்பதால், மனிதனுக்கு அறிவு இருந்தும் தொல்லைக்கும் துன்பத்திற்கும் ஆளாகிறான்; அடிமையாக வாழ்கிறான்.

இனி, ஓர் அய்ம்பது ஆண்டுகளுக்குள் மனிதனுக்குச் சராசரி வயது 100 ஆகப்போகிறது; இது உறுதி. இப்போதே பல நாடுகளில் சராசரி மனித வயது 67 முதல் 74 வரை இருந்து வருகிறது. நமது நாட்டில் 1950-இல் சராசரி வயது 32 ஆக இருந்தது. இன்று 50 ஆக ஆகிவிட்டது! இதற்குக் காணம், 1940இல் படித்த மக்கள் நம் நாட்டில் 100க்கு 9 பேராக இருந்தவர்கள், காமராசர் முயற்சியால் 100க்கு 50 பேராக ஆனதுதான். அதோடு கூடவே, ‘கடவுளும்’, ‘கடவுள் செயலும்’ வெகுதூரம் குறைந்து மறைந்து வருவதுதான் என்று சொல்லுவேன்.

கடவுள் மறைய மறைய, மனிதனுக்கு அறிவு வளரும்; சுதந்திரம் அதிகமாகும். நமது பெண்களுக்குப் பூரண சுதந்திரம் இருக்குமானால், வாழ்வில் சுயேச்சையும் சமத்துவமும் ஏற்படுமானால், மனிதனின் அறிவும் ஆயுளும் எல்லை இல்லாமல் வளர்ந்துகொண்டே போகும்.

இன்றைய நம் நாட்டு ஆட்சியாளர்களுக்கு (உண்மையான) தி.மு.க.காரருக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது. அவர்கள் (தி.மு.க.காரர்) இனியும் 2 லட்சம் மெம்பர்களைச் சேர்க்க வேண்டும். பிறகு இவர்களை அசைக்க எந்த மாஜிகளாலும் முடியாது. இதுதான் கடவுள் இரகசியம்.

## கடவுளும் மனிதனும்

உலகில் மக்களிடையேயுள்ள அறியாமைகளில் எல்லாம் தலை சிறந்த அறியாமை - கடவுளைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துகளேயாகும்.

உலகில் கடவுள் பெயரால் உள்ள மதங்களில் குறிப்பிடத்தக்க பெரிய மதங்கள் 3 (மூன்று) என்று சொல்லலாம். அவை முறையே,

கிறிஸ்துவ மதம்,
இஸ்லாமிய மதம்,
இந்து மதம்

என்று சொல்லப்படுபவைகளாகும். இவைகளில் முதல் இரண்டு மதங்களும் சரித்திர சம்பந்தமான ஆதாரங்களைக் கொண்ட மதங்களாகும்.

மூன்றாவது மதமான இந்து மதம் என்பது காலப்போக்கில் கற்பனைக் கருத்துகளால் பெருக்கிச் சமயத்துக்கு ஏற்றபடி மக்களுக்குள் புகுத்தி, மக்களை ஏய்க்கும் ஒரு கதம்பக் கருத்து மதமாகும். இந்த மதக் கோவைக்கு இந்து மதம் என்கின்ற பெயர் முன்னைய இரண்டு மத காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட பெயராகும்.

இது வேத மதமாயிருந்தது, ஆரிய மதம் என்றாகி, பிராமண மதம் என்று கூறப்பட்டு வந்து, கடைசியில் இந்து மதம் என்று சொல்லப்படுவதாகும்.

## கிறிஸ்துவ மதம்

உலகில் கிறிஸ்துவ மதம்தான் மிகப்பெரிய எண்ணிக்கை கொண்ட மக்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் மதமாகும்.

அடுத்தது இஸ்லாம் மதம் என்பதாகும்: இது கிறிஸ்துவ மத மக்கள் அளவில் சற்றேறக்குறைய 3இல் ஒரு பங்குக்குக் குறையாத மக்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதாகும்.

## இந்து மதம்

மூன்றாவதான இந்து மதம் என்பது இஸ்லாம் மதத்தைவிட, மிகச் சிறிய கூட்டத்தினை அதாவது இஸ்லாம் மத மக்களில் சற்றேறக்குறைய நான்கிலொரு பங்குகளைக் கொண்டதாக இருக்கலாம்.

இவை தவிர, பவுத்த மதமென்ற ஒரு மதம் இருக்கிறது. இம்மதத்திற்குக் கடவுள் கிடையாது. என்றாலும், கடவுள் நம்பிக்கை, மதத்துக்கு உண்டான சடங்குகள் பெரிதும் உண்டு என்பதோடு, கிறிஸ்துவ மதத்துக்கு அடுத்தபடியாகப் பெரிய எண்ணிக்கை கொண்ட மக்களைத் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கிறது.

சீனா, ஜப்பான், சயாம், பர்மா, சிலோன் முதலிய நாடுகளுடன் மற்றும் சில நாடுகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் மதமாகும்.

புத்தமதம் என்று சொல்லப்படுவதற்கு மற்றொரு பெயர் சொல்லவேண்டுமானால், ‘அறிவு மதம்’ என்று சொல்லுவது பொருத்தமாகும். ‘புத்தி’ என்ற வடமொழிப் பெயரைக் கொண்ட புத்த மதம் என்பதைத் தமிழில் கூற வேண்டுமானால், அறிவு மதம் என்றுதான் கூறலாம்.

ஏனென்றால், அறிவுக்கு ஏற்ற கொள்கை என்றால், அதில் கடவுளுக்கு இடமில்லை. ஆதலால், புத்தமதம் அறிவு மதம் என்று சொல்ல நேர்ந்தது. அறிவுப்படி கூறும்போது, புத்தமதத்தை ஒரு மதம் என்று புத்தர்கள், அறிவாளிகள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

மதம் என்றால் கடவுள் இருந்தாக வேண்டும்;
கடவுளை நம்ப வேண்டும்.

மற்றும் அறிவுக்கு அடங்காத சில விஷயங்களை - கருத்துகளை நம்பி ஆக வேண்டும்.

ஆதலால், புத்திக் கொள்கைகளை, அறிவுக் கருத்துகளை மதம் என்று சொல்வதில்லை. கருத்து, கொள்கை, கோட்பாடு என்று பொதுவாக அறிஞர்கள் சொல்லுவார்கள்.

முற்கூறிய மும்மதங்களுக்கும் கடவுள் உண்டு என்றாலும், இவைகளில் ஒரு கடவுள் மதமும் உண்டு; பல கடவுள் மதமும் உண்டு. இம்மூன்று மதக்காரர்களும் கடவுளை, அதாவது ஒரு கடவுளை - பல கடவுளைக் கொண்டிருந்தாலும், கடவுளையாகட்டும் மற்றும் தேவர்களையாகட்டும் ஒன்று என்றும், பல என்றும் கொள்கையாகக்

கொண்டிருந்தாலும், இவர்கள் எல்லோரும் கடவுளை ஒரே தன்மையாகத்தான் கருதுகிறார்கள்.

எப்படி என்றால், கடவுள் நம்பிக்கைக்காரர்கள் எல்லோரும் கடவுளை மனிதனைப் போலத்தான் கருதுகிறார்கள். அதாவது இலக்கணத்தில் அஃறிணை உயர்திணை என்கின்ற இரண்டு திணைகளில் உயர்திணைப் பொருளாக, அதுவும் மனிதனைப்போல, மனிதனுக்குண்டான எல்லாக் குணங்களையும் பொருத்தி மனிதனாகவே, மனிதத் தன்மை உடையவனாகவே, மனிதனைவிட எண்ணமுடையவனாகவே இருந்தாலும் செய்கையில் சிறிது சக்தி அதிகமுடையவனாகக் கற்பித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

எப்படி என்றால், மனிதன் தனது எண்ணத்தை நிறைவேற்றச் செய்கையில் செய்தாக வேண்டும். ஆனால், மனிதன் கற்பித்துக்கொண்ட கடவுள் மனிதனைப்போன்ற எண்ணங்களை உடையவனாகவே இருந்தாலும், அந்த எண்ணங்களை நிறைவேற்றக் காரியத்தில் செய்யாமல், "நினைத்த மாத்திரத்திலே ஈடேறக் கூடிய" மாதிரி நினைப்பிலேயே செய்துவிடுகிறான்.

இதுதான் மனிதனுக்கும், மனிதன் கற்பித்துக்கொண்ட கடவுளுக்கும் உள்ள பேதமே தவிர, மற்றபடி தத்துவத்தில் ஒரு பேதமும் இல்லை.

இரண்டு பேர்களும் மனிதர்களேதான்; இரண்டு பேரும் மனித சுபாவமுடையவர்களேதான். ஒன்றுக்கொன்று உயர்வு கூறவேண்டு மானால், செய்கையில் சக்தி அதிகம் என்பதைத் தவிர, எண்ணத்தில் உயர்வான எண்ணம் என்பதாக ஒன்றோ, அல்லது தன்மையில் உயர்வான தன்மை என்பதாக ஒன்றோ இருப்பதாக எதுவும் இல்லை. எதையும் நாம் காண - அனுபவிக்கத் தக்கதாகக் கற்பிக்கவில்லை.

கிறிஸ்து கற்பித்துக்கொண்ட கடவுளுக்கு 'ஒரு குமாரன்' உண்டு.
முகமது நபி கற்பித்துக்கொண்ட கடவுளுக்கு 'ஒரு தூதன்' உண்டு.
அதுபோலவே, மனிதனுக்கும் 'குமாரன்' உண்டு. 'தூதன்' உண்டு.

கடவுள், "இவைகளை எண்ணத்தில் உண்டாக்கிக் கொண்டான்" அதுவும் ஒரே தடவைதான். மனிதன் இவைகளைச் செயற்கையில் தினமும் உண்டாக்கிக் கொள்கிறான் - இப்படியேதான் ஒவ்வொரு காரியத்தையும்.

உதாரணமாகக் கடவுள் நன்மை செய்தவனுக்கு நன்மை செய்கிறான்; தீமை செய்தவர்களுக்குத் தீமை செய்கிறான்.

மனிதனும் அப்படியே. தனக்கு நன்மை செய்தவர்களுக்கு நலம் செய்கிறான்; தீமை செய்தவனுக்குத் தீமை செய்கிறான். கடவுள் எவ்வளவு தவறு செய்த மனிதனையும் தன்னைப் பிரார்த்தித்து, தோத்தரித்து, மன்னிப்புக் கேட்டவனை மன்னிக்கிறான்.

கடவுளும் சிலரை மன்னிக்காமல் தண்டிக்கிறான்;
மனிதனும் அதுபோலவே மன்னிக்காமல் தண்டிக்கிறான்.
கடவுளும் பழி வாங்குகிறான்;
மனிதனும் பழி வாங்குகிறான்.

இப்படியே மனிதனிடத்தில் உள்ள எல்லாக் குணங்களும் கடவுளிடத்திலும் உண்டு; கடவுளிடத்தில் உள்ள எல்லாக் காரியமும் மனிதனிடத்திலும் உண்டு .

மனிதனுக்குக் கிரிமினல் ஆக்ட் உண்டு;
கடவுளுக்கும் கிரிமினல் ஆக்ட் உண்டு.
மனிதனுக்கும் பிற மனிதனைத் தண்டிக்க ஜெயில் உண்டு;
கடவுளுக்கும் தண்டிக்க நரகம் உண்டு.
மனிதனும் தண்டனை கொடுக்கிறான்;
கடவுளும் தண்டனை கொடுக்கிறான்.
மனிதனும் மனிதனை - ஜீவனை ஏராளமாகக் கொல்லுகிறான்;

கடவுளும் ஏராளமான மனிதர்களை -ஜீவன்களைக் கொல்லுகிறான் - அதாவது சாகடிக்கிறான்!

மனிதனும் மக்கள் பட்டினி கிடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்!

கடவுளும் ஏராளமான மக்கள் - ஜீவன்கள் பட்டினி கிடப்பதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறான்!

மற்றும் பல கடவுள்களையும், உருவக் கடவுள்களையும் கற்பித்துக் கொண்டவனும், மனிதனை மனிதத் தன்மையையேதான் கடவுளாக ஆக்கிக் கொண்டான் என்றாலும், இவன் (பல கடவுள்காரன்) அயோக்கியத் தனத்தையும் இழிகுணத் தன்மையையும் கொண்ட மனிதனைத்தான் கடவுளாகக் கற்பித்துக் கொண்டான். ஏனென்றால், பல கடவுள்கள், உருவக் கடவுள்களைக் கற்பித்துக் கொண்ட மனிதன் காட்டு மிராண்டியாய், மூர்க்கனாய், மடையனாய், ஒழுக்கம் வரைமுறை என்பதே ஏற்படாதவனாய் இருந்த காலத்தில் கற்பித்துக் கொண்டதால், அன்றைய நிலைக்கு ஏற்ற, பொருந்திய , விளங்கிய தன்மைகளையும் கொண்டே கற்பித்துக்கொள்ள வேண்டியவனாவான்.

உதாரணமாகப் பார்ப்பான் துவக்கத்தில் கடவுள் – கடவுள் தன்மை என்பதாக எதையும் கற்பித்துக் கொள்ளவில்லை. ஏனென்றால், அந்தக் காலத்தில் அவன் மலைவாசியாக இருந்தான்; ஆனதால் அவன் "ஆகாயத்தில் மறைவாக சஞ்சரித்துக் கொண்டிருக்கிற பல தேவர்களைக் கற்பித்துக் கொண்டான்; இவர்களையும் மிகக் கீழ்த்தரமான மனிதத் தன்மை கொண்டவர்களாகவே கற்பித்துக் கொண்டான்."

இந்தக்கற்பனைத்தேவர்களும்கூடஅய்ரோப்பியக்காட்டுமிராண்டி மக்களால் பல காரியங்களுக்குப் பல குணமுடையவர்களாகக் கற்பித்து, பாவித்துக்கொண்டே தேவர்களையே அவர்களது பெயர்களை மாற்றி அமைத்துக் கொண்டார்கள்; அவை பெரிதும் மக்கள் பயப்படுவதற்கு ஏற்ப, மக்களை அச்சுறுத்தத் தக்க வண்ணம் குணங்களை ஏற்றிக் கற்பித்துக் கொண்டார்கள்; ஆனதால் அதே குணங்கண்டு பெயர்களை மாற்றிக் கற்பித்து அமைத்துக் கொண்டார்கள்.

சைவர்களால் ருத்திரன் என்றும், துர்க்கை என்றும் போற்றப்படும் தேவர்கள், அய்ரோப்பியக் காட்டுமிராண்டிகளால் 'தகப்பன் கடவுள்' என்ற பெயரால், 'தாய்க்கடவுள்' என்ற பெயரால் ஏற்பாடு செய்து கொண்ட தேவர்களாவார்கள். அதையேதான் சைவரும் இன்று 'அம்மைக் கடவுள்', அப்பன் கடவுள்' என்று சொல்லுகிறார்கள்.

அந்தக் கடவுள்களுக்குக் காட்டாளர்கள் போலவே ஆயுதங்கள்! மழு, சூலாயுதம், சிங்க வாகனமும்; பெண் கடவுளுக்கு அரிவாள், சூலாயுதம், சிங்க வாகனமும் கோரமான உருவமும் கொண்ட பெண்களாகக் கற்பித்து வணங்கி வந்திருக்கிறார்கள். மற்ற தேவர்களும் அப்படியேதான் கற்பிக்கப்பட்டுப் பரப்பி விடப்பட்டார்கள் !

அக்காலத்தில் அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட தேவர்கள் – பஞ்ச பூதங்களுக்கு அய்ந்து தேவர்கள்; நிலம் – பார்வதி; நீர் – வருணபகவான்; காற்று – வாயு பகவான்; நெருப்பு – அக்கினி பகவான்; ஆகாயம் – ஆகாசவாணி; சூரியன் – சூரிய பகவான்; சந்திரன் – சந்திர பகவான்; சாவு – எமதர்மன்; உற்பத்தி – பிரம்ம தேவன்; வாழ்வு – விஷ்ணுதேவன்; அழிவு – ருத்திர (சிவ) தேவன்; காலை நேரம் – உஷாதேவி; இன்னும் இப்படியே பல தேவர்கள்! இவர்களுக்கு அரசன் – இந்திரன்! இவனைத் தேவேந்திரன் என்றே சொல்லுவார்கள்.

இவ்வளவு பேர்களுக்கும் கணவர், மனைவிகள், சிலருக்கு மக்களும் உண்டு! இதில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இத்தனை பேர்களையும் ஒழுக்கம், நாணயம், யோக்கியம் இல்லாத அயோக்கியத் தன்மையுடைய மனிதர்களாக, மனிதத் தன்மையுடையவர்களாகவே கற்பித்துக்கொண்டார்கள். இவர்களுக்கு வரைமுறையே இல்லாமல் இருந்திருக்கிறது. கூடாதது, இழிவானது, மகா பாதகமானது என்று நாம் இன்று கூறும் முறைகளை ஆண், பெண் சம்பந்தத்திற்கு கற்பித்துக் கொண்டார்கள். பிற்காலத்தில் நாளாவட்டத்தில் இவர்களை கடவுளாகவே ஆக்கிவிட்டார்கள்! நாமும் இன்று இவைகளைச் சகிதமாகக் கடவுளாகவும், கடவுள் தன்மையாகவும் கருதி, இவர்களை வணங்கினால் நமக்குச் சகல பாக்கியமும் கிடைக்கும் என நம்பித் தொழுது - வணங்கி வருகிறோம்.

கடவுள் என்றால் - கடவுள் தன்மை என்றால், அது என்ன.... எப்படிப்பட்டது? என்பதே தெரியாதவர்களாய் இருக்கிறோம்.

மனித உருவத்தை - மனிதத் தன்மையை - மனிதத் தன்மையிலும் இழிகுண மனிதத் தன்மையைக் கடவுளாகக் கருதி - வணங்கி வருகிறோம் என்பதோடு, வாய்ப் பேச்சளவில் மனிதத் தன்மைக்கு மேற்பட்ட சர்வசக்தி கொண்ட, எல்லாம் வல்லவர் 'கடவுள்' என்று பேசி மனப்பால் குடித்து வருகிறோம்! ஒன்றையும் காரியத்தில் அறிய முடியவில்லை .

பொதுவாக, மனிதன் பெரிதும் எதில் முட்டாள், மடையன் என்றால், இந்தக் கடவுள் எண்ணத்திலேதான் முதலாவது முட்டாளாக - மடையனாக விளங்குகிறான். என்ன காரணமோ இந்த மடமையை விளக்கி எடுத்துக்கூற அறிவு படைத்த மக்களாகிய நம்மில் எவரும் முன் வருவதில்லை.

உலகத்திலேயே முதன்முதலாகத் தோன்றிய தத்துவ ஞானி என்பதாக ஒருவரைக் கூற வேண்டுமானால், சரித்திர ஆதாரப்படி புத்தரைத்தான் சொல்ல முடிகிறது. அடுத்தாற்போல் மேல்நாடுகளில் தோன்றியவர் சாக்ரடீஸ் என்ற ஞானியாவார். இவர் புத்தருக்குப் பின் தோன்றியவரே!

இவர்களுடைய மெய்ஞ்ஞான போதம் சிந்திப்பாரற்றுச் சீந்துவாரற்று மறைந்து கிடக்கின்றன; பொய்க் கற்பனையையும் மடமையையும் போதித்தவர்களையே உலகம் போற்றுகிறது - பின்பற்றுகிறது!

அரசன் - ஆட்சி பார்ப்பனர்க்கு அடிமைப்பட்டவனாகிவிட்டான்; பார்ப்பான் தன் (இன) சுயநலத்திற்கே அடிமைப்பட்டவனாகிவிட்டான்; அவன் (பார்ப்பான்) தன்னை மேலான பிறவி என்று ஆக்கிக் கொள்வதில்தான் கவலைகொண்டு, அதற்காகவே கடவுளை வைத்து வருகிறானே ஒழிய, மேலான பிறவி என்பதற்குத் தன்னிடம் மேலான குணம் இருக்கவேண்டுமே என்பதைப்பற்றிச் சிறிது கூடக் கவலைப்படவில்லை.

அதுபோலவேதான் கடவுளைக் கற்பித்தவர்களும், உலகில் "உள்ள" எல்லா வஸ்துக்களிலும் 'கடவுள் பெரியவர்' என்று சொல்லிக் கற்பித்தார்களே ஒழிய, மனிதத்தன்மைக்கு மேல் கடவுளிடம் என்ன பெருந்தன்மை இருக்கிறது என்று, எதையும் - எவரும் நிரூபித்து - மெய்ப்பித்துக் காட்டவே இல்லை .

மதங்கள் என்பவைகளுக்கெல்லாம் ஒரு கடவுள் இருந்தாக வேண்டும்; மோட்சம், நரகம் இருந்தாகவேண்டும்; கடவுள் தன்மை பொருந்திய அவதார புருஷர்கள், மதத் தலைவர்கள், குருமார்கள் இருந்தாக வேண்டும்; மதக் குறிகள் இருந்தாக வேண்டும்.

இவை அல்லாமல் உலகில் எந்த மதமும் இருக்க முடியாது; இந்து மதத்துக்கோ இவை மட்டும் போதாது. அதாவது, பல கடவுள்கள் வேண்டும்; பலவிதமான மோட்சங்கள், பலவிதமான நரகங்கள் வேண்டும். மற்றும் பலவிதமான பிறப்புகள், முன்பின் துன்பங்கள் வேண்டும்; பலவிதமான அவதாரங்கள், பலவிதமான குருமார்கள் வேண்டும். இவ்வளவும் போதாமல் கடவுளை நேரில் கண்டு மோட்சத்திற்குப் போன பலவிதமான மோட்சங்கள், பலவிதமான பக்தர்கள் வேண்டும்.

இந்தக் காரியங்களில் சிறப்பாக இந்து மதத்தின் உட்பிரிவு மதங்களான சைவ மதம், வைணவ மதம் என்று சொல்லப்படும் இரண்டு உட்பிரிவு மதங்களும் ஏறக்குறைய ஒன்றுபோலவே இருந்து வருகின்றன.

பெயர்களைப் பொறுத்தவரையில் சில மாறுதல்கள் இருக்கலாமே ஒழிய, காரியங்களைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய ஒருவரைப் பார்த்து ஒருவர் காப்பியடித்ததுபோலவேதான் இருக்கிறது.

உதாரணமாக, வைணவத்தில் இராமாயணம் ஏற்பட்டதற்குக் காரணம், விஷ்ணுவும் அவரது மனைவியாகிய இலட்சுமியும் கலவி செய்ததிலிருந்து ஏற்பட்டது என்றால், சைவத்திற்கு - கந்த

புராணம் ஏற்பட்டதற்குக் காரணம், சிவனும் அவரது மனைவியாகிய பார்வதியும் கலவி செய்ததிலிருந்தே ஏற்பட்டது!

எப்படியெனில், விஷ்ணுவும் லட்சுமியும் பகல் நேரத்தில் கலவியில் இருந்தபோது, சில ரிஷிகள் படுக்கை அறைக்குள் பிரவேசித்து விஷ்ணுவைக் காண ஆசைப்பட்டதாகவும், துவாரபாலகர்கள் தடுத் ததாகவும், அதற்கு அவர்களை ரிஷிகள் சபித்ததாகவும், அந்தச் சாபம் தீரவேண்டியதற்காகவே இராமாயணம் முதலியவை ஏற்பட வேண்டியதாயிற்று.

அதுபோலவே பரமசிவன் பார்வதியோடு பல நூறு வருடங்கள் விடாமல் கலவி செய்து கொண்டிருந்ததாகவும், அதனால் ஏற்படும் வீரியமும், கர்ப்பமும் மிகக் கொடுமையான காரியத்தைச் செய்யக்கூடியதாகிவிடும் என்று தேவர்கள் முறையிட, கலவி முற்றுப் பெறுவதற்கு முன்பாகவே இந்திரியம் நிலத்தில் விழுந்து, பிறகு என்னென்னமோ ஆபாசமாகிக் கடைசியாகச் சுப்பிரமணியர் தோன்றிக் கந்தபுராணம் ஏற்பட வேண்டியதாயிற்று என்றே கதைகள் இருக்கின்றன.

அன்றியும், பூபாரம் தீர்க்கவும்; ராட்சதர்களை அழிக்கவும் சிவன் சுப்பிரமணியனாகத் தோன்றினார்.

ராமன் பிறப்பதற்காகத் தேவர்கள் விஷ்ணுவை வேண்டினார்கள்;

சுப்பிரமணியன் பிறப்பதற்காக தேவர்கள் சிவனை வேண்டினார்கள்.

ராமன் ராட்சதர்கள் என்பவர்களைக் கொன்றான்;
சுப்பிரமணியன் அசுரர்கள் என்பவர்களைக் கொன்றான்.

ராமன் ராட்சதர்களைக் கொல்லும்போது, (மூலபலம்) கொல்லக் கொல்ல உற்பத்தியாகிக் கொண்டே வந்தன;

சுப்பிரமணியன் அசுரர்களைக் கொல்லும்போது, கொல்லக் கொல்ல அசுரர்கள் தலைகள் முளைத்துக்கொண்டே வந்தன.

ராமன் பெண்சாதி சீதை ஒரு வளர்ப்புப் பெண்; சமுத்திரத்தில் கண்டெடுக்கப்பட்டவள் என்பதாக ஒரு கதை.

அதுபோல் சுப்பிரமணியன் பெண்சாதியும், வளர்ப்புப் பெண்; வள்ளிச் செடிக்கடியில் கண்டெடுக்கப்பட்டவள்.

சைவத்திற்கும் - வைணவத்திற்கும் இடையே அநேக விஷயங்களில் கடவுள்களைப்பற்றிய கதைப் பொருத்தங்கள் காணலாம்.

அதைப்போலவே சைவ வைணவ ஆச்சாரியர்கள் விஷயத்திலும் சைவத்திற்கு நாயன்மார்களாகவும், வைணவத்துக்கு ஆழ்வாராதிகளாகவும் ஏற்படுத்தப்பட்டதோடல்லாமல் அவர்கள் செய்த காரியங்கள், அதன் பயனாய் அவர்கள் அடைந்த முக்திகள் ஆகிய விஷயங்களிலும் ஒன்று போலவே கதைகள் கற்பிக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

வைணவப் பக்தர்கள் விஷயத்திற்குப் "பக்தலீலாமிருதம்" என்னும் புத்தகம் போலவே, சைவ பக்தர்கள் விஷயத்திற்குப் 'பெரிய புராணம்' என்னும் புத்தகமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

வைணவ பக்தரில் ஒரு குயவர் இருந்தால், சைவ பக்தரிலும் ஒரு குயவர் இருக்கிறார்.

எப்படியெனில், வைணவக் குயவர் கோரகும்பராய் இருந்தால், சைவக் குயவர் திருநீலகண்டராய் இருக்கிறார்.

இரு குயவ பக்தர்கள் கதையும் ஒன்றுபோலவே அதாவது கோரகும்பரும், தன் பெண்சாதியுடன் பேசாமல் இருந்து கடைசியாக மகாவிஷ்ணுவே இருவரையும் பேசும்படிச் செய்து சேர்த்துவைக்கிறார்.

திருநீலகண்டக் குயவனாரும் தன் பெண்சாதியுடன் பேசாமல் இருந்து கடைசியாகச் சிவபெருமான் வந்தே இருவரையும் பேசும்படிச் செய்து சேர்த்துவைக்கிறார்.

மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பதிலும் வைணவ மதத்துக்குச் சொர்க்கமாலா என்கின்ற தீண்டாதஜாதி பக்தர் ஒருவர் இருந்து, அவரைக் கோவிலுக்குள் விடாமல் தடுக்கப்பட்டு, கனவு கண்டு, கடைசியாக விஷ்ணு வந்து அழைத்துப் போகிறார்.

சைவத்தில் தீண்டப்படாத வகுப்பு நந்தன் என்பதாக ஒருவர் இருந்து பரமசிவன் வந்து கனவில் சொல்லி, சாமி தரிசனம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இரண்டுமத புராணங்களிலும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் ஒரே மாதிரியான உயர்வும், மற்றவர்களுக்கு இழிவும்

ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு, ஜாதிப் பாகுபாடுகளைப்பற்றி ஒரே மாதிரியாகவே குறிப்பிட்டுப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

இவற்றுள் சைவத்தைப் பார்த்து வைணவர்கள் காப்பியடித்தார்களா? வைணவத்தைப் பார்த்துச் சைவர்கள் காப்பியடித்தார்களா? என்பது ஓர் ஆராய்ச்சி வேலையாய் இருக்கலாம்.

அதில் பிரவேசிக்க நமக்கு இஷ்டமில்லை. ஏனெனில், தமிழ்நாட்டில் சைவத்தைப் பற்றிப் பிரபலமாய்ப் பேசப்படுகின்றதே ஒழிய, மற்றபடி இந்தியாவின் வடபாகம் முழுவதும் ஆந்திரப் பிரதேசம் உள்பட வைணவமே மேலோங்கியிருக்கின்றது. வடநாட்டில் வைணவம் என்றால்தான் மாமிசம் சாப்பிடாதவர் என்று அர்த்தமாகும்.

ஆகையால், இவை இரண்டிற்கும் மதக் கிரந்தங்கள், மதக் கதைகள், மதப் பக்தர்கள், மதக் கடவுள்கள் என்பவைகளில் ஒன்றைக் காப்பியடித்தோ, இருவரும் ஒன்றாய் உட்கார்ந்து கூடிப்பேசியோ ஒரு முடிவுக்கு வந்துதான் இப்பெரும் புளுகு மூட்டைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

உலகில் மனிதனுக்குத்தான் கடவுள் கற்பிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, மற்ற ஜீவராசிகளுக்கும், புல், பூண்டு தாவரங்களுக்கும் கடவுள் என்கிற உணர்ச்சியே கிடையாது. ஆனால், அவையெல்லாம் மனிதர்களைப் போலவே தோன்றி வாழ்ந்து செயல்பட்டு அழிந்து மாய்ந்து போகின்றன.

தோன்றி, வாழ்ந்து, அழிந்து, மாய்ந்து போவதில் மனிதர்களுக்கும் மற்ற ஜீவராசி, புல் பூண்டு தாவரங்களுக்கும் மற்ற பொருள்களுக்கும் எவ்வித மாறுதலும் காண முடிவதில்லை .

பிறவியில் இயற்கையாய் உள்ள பேதங்களால் சில மாறுதல்களைக் காண்கிறோம். அம்மாறுதல்களின் அடிப்படையில் பேதம் எதுவும் காண்பதற்கில்லை.

ஜீவநூல் ஜீவ ஆராய்ச்சி வல்லுநர்கள் ஆதியில் அதாவது உலகம் ஏற்பட்ட - தோன்றிய காலத்தில் மனிதனும் மற்ற மிருகாதி ஜீவப்பிராணிகளும் ஒன்று போலவேதான் நடந்து வாழ்ந்து வந்தன என்று குறிப்பிடுகிறார்கள்.

மனிதனுக்கு மற்ற ஜீவராசிகளைவிட அறிவுத் துறையில் சிறிது மாற்றம் இயற்கையில் இருந்துவருகிற காரணத்தால், மனிதனுக்கு

ஆசை பெருக்கெடுத்து வாழ்க்கையில் பெரும் கவலைக்கு ஆளாகி அதனால் துக்க சுகத்திற்கு ஆளாகி உழலுகின்றான். ஆசையும் மடமையும் சேர்ந்தே மனிதனுக்குக் கடவுள் கற்பிக்கப்பட்டுப் புகுத்தப்பட்டு அறிவின் பயனைக் கொடுத்துக்கொண்டு கவலைக்கும் துக்க சுகத்திற்கும் ஆளாகி அழிகிறான்.

மனித சமுதாயத்தில் கடவுள் கற்பனை புகுத்தப்படாமல் இருந்தால், மனிதர் நிலையே இன்று வேறாக இருக்கும்.

அதாவது கவலையற்ற, துக்கமற்ற வாழ்வு வாழும்படியான நிலையை எய்தியிருப்பான்.

இன்று கவலையும் துக்கமும் இல்லாத மனிதனைக் காண்பதே அரிதாயிருக்கிறது. எந்த உயர்நிலையில் இருப்பவனுக்கும் கவலையும் துக்கமும் குடி கொண்டிருக்கிறது. கடவுள் எண்ணத்தை ஒழித்தவர்களுக்குக் கடவுள் இல்லை. எல்லாம் இயற்கை என்று எண்ணி இருப்பவர்களுக்குத் துக்கம் - கவலை இல்லாமல் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களைத்தான் ஞானிகள் - முற்றும் துறந்த மெய்ஞ்ஞானிகள் என்று சொல்லுவார்கள். அந்த நிலையை மனிதன் எய்துவதும் எளிதன்று! ஞானம் தோன்றும், துறவு தோன்றும். தோன்றியவன் உலகில் மக்களிடையில் வாழ்வதால், அடிக்கடி சறுக்கி விழுந்து கவலைக்கும் துக்கத்திற்கும் ஆளாகிவிடுகிறான் என்றாலும், நாம் அறியாமல் நமக்குத் தெரியாமல் யாராவது இருந்தாலும் இருக்கலாம்.

மோட்சம் என்ற சொல்லுக்கும், முக்தி என்ற சொல்லுக்கும் உண்மையான கருத்து (அர்த்தம்) கவலையற்ற தன்மை - துக்கமற்ற தன்மை என்றுதான் பொருள். மோட்சம் (அல்லது முக்தி) - துக்க நாசம்; இந்த நிலை கடவுள் (ஒருவர் அல்லது பலர்) இருக்கிறார் என்கின்ற எண்ணமுடையவனுக்கு என்றுமே தோன்றாது.

எவ்வளவுக்கெவ்வளவு கடவுள் கருத்து ஆழமாகப் படிகிறதோ - உடைத்தானவனாய் இருக்கிறானோ அவன் ஆயுள் பரியந்தம் துக்கமும் கவலையும் கொண்டவனாகத்தான் இருப்பான். பேராசைக் காரனாகத்தான் இருப்பான். பொதுவாக இன்று பார்ப்போம் - கடவுள் பக்தன், கடவுளை வணங்குகிறவன் அவன் முட்டாளானாலும் “அறிவாளி” ஆனாலும் வணங்குகிறான்? என்ன எண்ணத்தில் வணங்குகிறான்? ஏதோ வேண்டுகோளின் மீதுதானே! எதையோ எதிர்பார்த்து ஆசைப்பட்டுத்தானே வணங்குகிறான்?

"எனக்கு ஒன்றுமே வேண்டாம்" என்று சொல்பவனாய் இருந்தாலும், "பாதாரவிந்தம் வேண்டும்" என்றாவது சொல்லித்தானே கும்பிடுவான்? அவன் யாருக்குச் சமம் என்றால், எனக்குப் பின்புறம் பிடரியில் ஒரு கண் இருக்கவேண்டும் என்று கடவுளை வணங்குகிறவனுக்குச் சமமானவன் தானே!

ஏதாவது ஒன்றை வேண்டித்தானே பக்தி, வணக்கம், பூசை, தொழுகை, பிரார்த்தனை முதலியவையெல்லாம். ஒன்றும் வேண்டாதவனுக்குக் கடவுளிடம் என்ன வேலை?

அதிலும் தவறு செய்தவன், மோசடி செய்தவன் - செய்கிறவன், பேராசைக்காரன் ஆகியவர்களுக்குத்தான் கடவுள், பக்தி, பூசை முதலியவை அதிகமாக இருப்பதைக் காண்கிறோம்.

எனக்குச் சுமார் பத்து ஜெயில்களில் இருந்த அனுபவம் உண்டு. கொலைக் கைதி முதல் ஒவ்வொரு கைதிகளும் அவனவன் அறைகளில் ஏதாவது ஒரு சாமிபடம்; சிலர் ஏதாவது ஒரு புராணம், பக்தி நூல் வைத்துப் பூசை - பிரார்த்தனை செய்துகொண்டு இருப்பதைத்தான் பார்த்தேன். ராஜமுந்திரி (கோதாவரி) ஜெயிலில் ஒரு கைதி - கொலை செய்தவன் - ஆயுள் தண்டனை அடைந்தவன். அவன் காலை 10:00 மணிக்குக் குளித்து விட்டு அரைமணி நேரம் ஒற்றைக்காலில் நின்றுகொண்டு கைகளைத் தலைக்குமேல் தூக்கிக் கூப்பிக் கும்பிட்டுக்கொண்டு எதையாவது சொல்லிக்கொண்டே நிற்பான். அவன் படித்தவன், கொஞ்சம் பணக்காரனும் கூட! எதற்காக இவ்வளவு பக்தி, பூஜை என்று கேட்டதற்குச் "சீக்கிரம் விடுதலையாவதற்கு" என்று சொன்னான். இப்படி எத்தனையோ கைதிகள் குளித்தவுடன் சாம்பலைப் பூசிக்கொண்டு சாமி கும்பிடுவதைப் பார்த்தேன்.

லஞ்சம் வாங்கும் சைவன்; லஞ்சம் வாங்கும் வைணவன், லஞ்சம் வாங்கும் முஸ்லிம், லஞ்சம் வாங்கும் கிறித்துவன் முக்கியமா இவர்கள் பெரிதும் பூசை, வணக்கம், தொழுகை, பிரார்த்தனை இவைகளில் மிகக் கண்டிப்பாக - தவறாமல் நடந்துகொள்கிறார்கள்.

அதிக பக்தி, பூசை, தானம், தர்மம், உபயம், கட்டளை உள்ள வியாபாரிகளைப்பற்றிக் கேட்கவே வேண்டாம். ஆகவே, மனிதனிடம் கடவுள் நம்பிக்கை, கடவுள் பக்தி இருப்பதெல்லாம் ஆசை காரணந்தானே ஒழிய, மனிதனை ஒழுக்கமுடையவனாக்கவோ, மற்றவர்களுக்குப் பயன்படும்படிச் செய்யவோ அல்ல என்பதை ஒவ்வொருவரும் நம்ப வேண்டுமாய் வேண்டுகிறேன்.

## கடவுள்

**வினா:** கடவுளைப்பற்றிப் பொதுவாக ஜனங்கள் கொண்டிருக்கும் கருத்துகளை விளக்கிக்கூறு.

**விடை:** கடவுள் வானமண்டலத்தையும், பூமியையும் அதிலுள்ள சகல சராசரங்களையும் படைத்தவன் என்று மக்களில் பெரும்பாலோர் நம்புகிறார்கள்.

**வினா:** அப்புறம்?

**விடை:** கடவுள் சர்வ ஞானமுடையவனாம். யாவற்றையும் பார்க்கிறானாம். பிரபஞ்ச முழுவதும் அவனது உடைமையாம். சர்வ வியாபியாம்.

**வினா:** கடவுள் ஒழுக்கத்தைப்பற்றி ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள்?

**விடை:** அவன் நீதிமானாம், புனிதனாம்.

**வினா:** வேறு என்ன?

**விடை:** அவன் அன்பு மயமானவனாம்.

**வினா:** கடவுள் அன்பு மயமானவனென்று ஜனங்கள் எப்பொழுதும் நம்புகிறார்களா?

**விடை:** இல்லை. மக்கள் அறிவும் ஒழுக்கமும் உயர உயரக் கடவுள் யோக்கியதையும் விருத்தியடைந்துகொண்டே போகிறது.

**வினா:** உன் கருத்தை நன்கு விளக்கிக் கூறு.

**விடை:** காட்டாளனின் கடவுள் ஒரு காட்டாளனாகவும் - திருடனாகவும் இருந்தான். அராபித் தலைவன் கடவுளான ஜாப் ஒரு கீழ்நாட்டு யதேச்சாதிகாரியாக இருந்தான். யூதர்கள் கடவுள் போர்வெறியனாயும், பழிக்குப் பழிவாங்கும் குணமுடையவனாகவும் இருந்தான். கிறிஸ்துவர் கடவுளோ அற்பாயுளுடைய மக்கள் செய்யும் குற்றங்களுக்கு நித்திய நரக தண்டனை வழங்கக் கூடியவனாக இருக்கிறான்.

**வினா:** கடவுளைப்பற்றிய வேறு அபிப்பிராயங்கள் என்ன?

**விடை:** மக்கள் மனோ -வாக்கு - காரியங்களினால் செய்யும் காரியங்களில் அவன் சிரத்தையுடயவனாக இருக்கிறானாம்.

**வினா:** ஏன்?

**விடை:** அவனுக்கு விருப்பமான காரியங்களை நாம் செய்தால் பரிசளிக்கவும், விருப்பமில்லாத காரியங்களைச் செய்தால் தண்டனையளிக்கவும்.

**வினா:** கடவுளுக்கு என்ன என்ன பெயர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன?

**விடை:** ஒவ்வொரு தேசத்தாரும் கடவுளை ஒவ்வொரு பெயரால் அழைக்கிறார்கள். கிரேக்கர்கள் ஜ்யூயஸ் என்றும், ரோமர்கள் ஜோ,வ் பார்சிகள் ஆர்முஸ்ஜித் என்றும், இந்துக்கள் பிரம்மம் என்றும், யூதர்களும், கிறித்துவர்களும் ஜிஹோவா என்றும், முகமதியர் அல்லா என்றும் கடவுளை அழைக்கிறார்கள்.

**வினா:** கடவுளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேறு பெயர்கள் எவை?

**விடை:** பரம்பொருள், அனந்தன், மூலகாரணன், பரமாத்மா, நித்தியசக்தி, பிரபஞ்சம், இயற்கை மனம், ஒழுங்கு முதலியன.

**வினா:** ஆனால், ஜனங்கள் சொல்லும் கடவுள் ஒரே பொருளைத்தானா குறிக்கிறது?

**விடை:** இல்லை. சிலர், கடவுளை ஓர் ஆளாகப் பாவனை கூறுகிறார்கள். சிலர், ஒரு கருத்தெனக் கூறுகிறார்கள். வேறு சிலர், சட்டம் என்கிறார்கள். மற்றும் அறிய முடியாத ஒரு சக்தி என்கிறார்கள். ஒரு கூட்டத்தார், கடவுள் பூரணன் என்கிறார்கள். பின்னும் சிலர், ஜடப்பொருளும் மனமும் அய்க்கியப்படும் நிலையே கடவுள் என நம்புகிறார்கள்.

**வினா:** மக்கள் எப்பொழுதும் ஒரே கடவுளில் நம்பிக்கை வைத்து வந்திருக்கிறார்களா?

**விடை:** மக்களில் பெரும்பாலோர் ஒரு கடவுள் அல்லது பல கடவுள்கள் இருப்பதாக நம்பியே வந்திருக்கிறார்கள்.

**வினா:** ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளுண்டா?

**விடை:** பல கடவுள்கள் உண்டென்றே பொதுவாக நம்பப்படுகிறது.

**வினா:** பல கடவுள்களை நம்புவோர் பலதெய்வவாதிகள், ஒரே கடவுளை நம்புவோர் ஏகதெய்வவாதிகள்.

**வினா:** சில பலதெய்வவாதிகளின் பெயரைச் சொல்லு?

**விடை:** எகிப்தியர், இந்துக்கள், கிரேக்கர், ரோமர்.

**வினா:** ஏக தெய்வவாதிகள் யார்?

**விடை:** யூதர்கள், கிறிஸ்துவர்கள், முகமதியர்

**வினா:** இவர் எல்லாம் எப்பொழுதுமே ஏக தெய்வவாதிகளாக இருந்தார்களா?

**விடை:** இல்லை; ஆதியில் எல்லா ஜாதியாரும் பல தெய்வங்களையே வணங்கி வந்தார்கள்.

**வினா:** பல தெய்வவாதிகளின் கடவுள்கள் எவை?

**விடை:** சூரியன், சந்திரன், ஆவிகள், நிழல்கள், பூதங்கள், பேய் பிசாசுகள், மிருகங்கள், மரங்கள், மலைகள், பாறைகள் நதிகள் முதலியன.

**வினா:** இவை எல்லாம் கடவுளாக நம்பப்பட்டதாய் உனக்கு எப்படித் தெரியும்?

**விடை:** எப்படியெனில், ஜனங்கள் அவைகளை வணங்குகிறார்கள்; அவைகளுக்கு ஆலயங்கள் கட்டினார்கள். விக்கிரகங்கள் உண்டு பண்ணினார்கள். அவைகளுக்குப் பூஜைகள் நடத்தினார்கள்.

**வினா:** இந்தத் தெய்வங்கள் எல்லாம் ஒரே மாதிரி மகிமையுடையன வென்று ஜனங்கள் நம்பினார்களா?

**விடை:** எல்லாக் கடவுள்களுக்கும் மேலான ஒரு கடவுளுக்கு அவை அடிமைகள் அல்லது சின்னங்கள் என்று அறிவாளிகளான சொற்ப பேர் நம்பினார்கள்.

**வினா:** அறிவில்லாதவர்களோ?

**விடை:** அவைகளில் சில அதிக சக்தியுடையவை என்றும், சில கருணையுடையவை என்றும், சில அழகானவை என்றும், சில அதிக புத்தியுடையவை என்றும் நம்பினார்கள்.

**வினா:** கடவுள் உற்பத்திக்கு அவர்கள் என்ன காரணம் கூறுகிறார்கள்?

**விடை:** கடவுள் உற்பத்திக்குப் பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன.

**வினா:** அவற்றுள் சிலவற்றை விளக்கு

**விடை:** முதற்காரணம், ஆதிகால மக்கள் அறிவில்லாதவர்களாக, குழந்தைகளைப் போலப் பயங்காளிகளாகவும் இருந்தார்கள். எனவே, தனக்கு அறிய முடியாதவைகள் மீது அவர்களுக்குப் பயமுண்டாயிற்று. கண்ணால் காண முடியாத ஏதோ ஒன்றே பயத்தை உண்டுபண்ணுகிறதென்று நம்பினார்கள்..

இரண்டாவது, மக்கள் பலவீனராயும் உதவியற்ற வராயுமிருப்பதால் அவர்களுக்கு உதவியளிக்கக்கூடிய சர்வ சக்தியுடைய ஒன்று இருக்க வேண்டுமென்று நம்பினார்கள்.

மூன்றாவது, மனிதன் இயல்பாக நேச மனப்பான்மை யுடையவன், பிறருடன் கலந்து பழகவே அவன் எப்பொழுதும் விரும்புகிறான். எனவே, தன்னைச் சூழ்ந்திருக்கும் அறிய முடியாத சக்திகளை அறியவும், அவற்றுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளவும் விரும்புகிறான். இறுதியில் அறியமுடியாத சக்திகளைக் கடவுளாக உருவகப்படுத்திக் கொள்கிறான்.

நான்காவது, தெய்வ நம்பிக்கைக்கு மரணமே முக்கியக் காரணம்.

**வினா:** அது எப்படி?

**விடை:** நமக்கு உலகத்தில் சிரஞ்சீவியாக வாழ முடியுமானால், தெய்வங்களைப் பற்றியோ, தெய்வீக சக்திகளைப்பற்றியோ நினைக்கத் தேவையே உண்டாகாது. மரணம் உண்டு என்ற உணர்ச்சியினாலேயே மறு ஜென்மத்தைப் பற்றியும், பிறப்புக்கும் இறப்புக்கும் காரணமாக இருக்கும் ஒன்றைப்பற்றியும் யோசிக்க வேண்டியதாக ஏற்படுகிறது. பிராணிகளுக்கு பணத்தைப் பற்றியும் சிந்தனையே இல்லாததனால் கடவுளும் இல்லை.

**வினா:** தெய்வங்களின் தொகை பெருகிக்கொண்டே இருக்கிறதா?

**விடை:** இல்லை, அது குறைந்து கொண்டே போகிறது.

**வினா:** ஏன்?

**விடை:** மக்களது அறிவும் சக்தியும் வளர வளரத் தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கை விருத்தியடைகிறது.

**வினா:** அறிவில்லாதவர் கடவுள்களைவிட, அறிவுடையோர் கடவுள் குறைவா?

**விடை:** ஆம்; நாகரிகமில்லாதவர்களே பல தெய்வங்களை வணங்குகிறார்கள்.

**வினா:** ஏகதெய்வவாதிகள் நிலைமை என்ன?

**விடை:** இப்பொழுதும் பெரும்பாலோர் ஏகதெய்வ நம்பிக்கை யுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

**வினா:** கடவுள் நம்பிக்கையே இல்லாதவர்கள் இருக்கிறார்களா?

**விடை:** ஆம்; அதிகம் பேர் இருக்கிறார்கள்.

**வினா:** அவர்கள் ஏன் கடவுளை நம்பவில்லை?

**விடை:** பொது ஜனங்கள் சங்கற்பப்படியுள்ள கடவுள், நமது அறிவுக்கு அதீதமானதென்று அவர்கள் கூறுகிறார்கள்.

**வினா:** கடவுள் உண்மையை நிரூபித்துக் காட்ட முடியாதா?

**விடை:** சிலர் முடியும் என்கிறார்கள்; சிலர் முடியாது என்கிறார்கள்.

**வினா:** கடவுளுண்மைக்குக் கூறப்படும் ஆதாரங்கள் எவை?

**விடை:** முதல் ஆதாரம் காரண காரிய வாதம்.

**வினா:** அதை விளக்கிக் கூறு.

**விடை:** எதற்கும் ஒரு காரணம் இருக்கவேண்டும். எனவே, பிரபஞ்சத்திற்கும் ஒரு கர்த்தா இருக்கவேண்டும். அந்தக் கர்த்தாவே கடவுள்.

**வினா:** இது ஒரு பலமான வாதமல்லவா?

**விடை:** பலமான வாதந்தான்; ஆனால், முடிவானதல்ல.

**வினா:** ஏன்?

**விடை:** யாவற்றிற்கும் ஒரு காரணமிருக்க வேண்டுமானால் கடவுளுக்கும் ஒரு காரணமிருக்க வேண்டுமே!

**வினா:** கடவுள் அனாதியாக இருக்கக்கூடாதா?

**விடை:** காரணமில்லாமலே கடவுளுக்கு இயங்க முடியுமானால், காரணமில்லாமல் காரியமில்லை என்கிற வாதமே அடியற்று வீழ்ந்துவிடுகிறது.

**வினா:** அப்புறம்?

**விடை:** காரணமின்றி அனாதிகாலமாகக் கடவுள் இயங்க முடியுமானால், பிரபஞ்சமும் எக்காரணமுமின்றி அனாதிகாலமாக இயங்க முடியும்.

**வினா:** கடவுளுக்கும் ஒரு காரணமுண்டு எனச் சம்மதித்தால், என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது?

**விடை:** அப்படியானால், அந்தக் காரணத்துக்கு மூலகாரணமென்ன என்று ஆராய வேண்டியதாக ஏற்படும். அவ்வாறு ஆராயத் தொடங்கினால் முடிவே ஏற்படாது.

**வினா:** வேறு வாதமென்ன?

**விடை:** பூரணத்துவ வாதம்.

**வினா:** அது என்ன? விளக்கிக் கூறு.

**விடை:** அதாவது, நாம் அபூரணமாக இருந்தாலும், (குறைபாடுடையவர்களாக இருந்தாலும்) பூரணமான ஒரு பொருள் உண்டென்ற உணர்ச்சி நமக்கு இருந்து கொண்டிருக்கிறது. அந்த உணர்ச்சி, அந்தப் பூரணப் பொருளின் சாயல் என்று நம்பப்படுகிறது.

**வினா:** அதனால் நாம் ஊகிக்க வேண்டியதென்ன?

**விடை:** அந்த உணர்ச்சி நமது உள்ளத்தில் இருந்து கொண்டு இருப்பதனால் அதற்கு, ஆதாரமாக ஒன்று இருக்க வேண்டுமென்றும், அதுவே கடவுள் என்றும் ஊகிக்க இடமிருக்கிறது.

**வினா:** மேலும் கொஞ்சம் விளக்குக!

**விடை:** ஒரு பூரண வஸ்துவின் பிரதிபிம்பம் நமது உள்ளத்தில் தோன்ற வேண்டுமானால், அது உள் பொருளாக இருக்கவேண்டும். அது உள் பொருளாக இல்லையானால், பூரணமாக இருக்கமுடியாது.

**வினா:** அப்படியானால் முடிவு என்ன?

**விடை:** கடவுளைப்பற்றிய உணர்ச்சி நமக்கு இருப்பதனால், கடவுள் ஒன்று இருக்க வேண்டும்; அப்படி ஒன்று இல்லையானால், நமக்கு அந்த உணர்ச்சி ஏற்பட்டிருக்கவே செய்யாது என்பதுதான் முடிவு.

**வினா:** இந்த வாதம் சரியானதுதானா?

**விடை:** முதல் வாதத்தைப் போல இது அவ்வளவு உறுதியானதன்று.

**வினா:** ஏன்?

**விடை:** பூரணத்துவம் - ஒரு குணம். உண்மை - ஒரு நிலைமை. அவை இரண்டும் சம்பந்தமற்றவை. ஒரு பெரிய பட்டணம் கடலில் ஆழ்ந்து கிடப்பதாகவோ, மேகமண்டலத்தில் மிதந்து கொண்டிருப்பதாகவோ நமது உள்ளத்து உணர்ச்சி ஏற்படலாம். ஆனால், அப்பேர்ப்பட்ட ஒரு பட்டணம் இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அதுபோல் ஒரு பூரண வஸ்துவைப் பற்றிய உணர்ச்சி நமக்கு இருப்பதனால், ஒரு பூரண வஸ்து இருக்கவேண்டுமென்ற கட்டாயமுமில்லை.

**வினா:** வேறொரு உதாரணத்தினால் விளக்கிகாட்டு!

**விடை:** பூமி பரந்திருப்பதாக வெகு காலம் மக்கள் நம்பி வந்தார்கள். அந்த உணர்ச்சி உலகத்தின் பிரதிபிம்பமாக இருக்கமுடியாது. ஏனெனில், பரபரப்பான பூமி இல்லவே இல்லை.

**வினா:** அப்படியானால் பூரண வஸ்துக்களும் அபூரண வஸ்துக்களும் நமது மனோ கற்பிதம்தானா?

**விடை:** ஆம்.

**வினா:** அடுத்த வாதம் என்ன?

**விடை:** அடுத்தது உருவக வாதம்.

**வினா:** அதை விளக்கு!

**விடை:** வினாடி, நிமிஷம், மணிகாட்டும் முறையில் ஒரு கடிகாரம் உருப்படுத்தப்பட்டிருப்பதனால், அது ஒரு நோக்குடன் உண்டு பண்ணப்பட்டிருக்கிறதென்றும், அதற்கு ஒரு கர்த்தா இருக்க வேண்டுமென்றும் நாம் அறிகிறோம். அதுபோல உலகமும் ஒரு நோக்கத்தோடு சிருஷ்டிக்கப்பட்டிருப்பதனால், அதற்கு ஒரு கர்த்தா இருக்க வேண்டும். அந்த கர்த்தாவே கடவுள்.

**வினா:** இந்த வாதம் எப்பேர்ப்பட்டது?

**விடை:** கடிகாரத்தை உலகத்துக்கு உவமையாகக் கூறமுடியாது. கடிகாரம் எதற்காக உண்டு பண்ணப்பட்டதென்று கூறிவிடலாம். ஆனால், உலகம் எதற்காக உண்டு பண்ணப்பட்டதென்று கூறுவது அவ்வளவு சுலபமான காரியமன்று.

**வினா:** பிரபஞ்ச அமைப்பு கடிகார அமைப்புப் போல அவ்வளவு தெளிவானதல்லவா?

**விடை:** தெளிவாக இருந்தால், இரகசியங்களுக்கு இடமே இல்லை.

**வினா:** கடிகாரத்தைப்பற்றி நாம் பூரணமாக அறிந்திருப்பது போல் பிரபஞ்சத்தைப்பற்றி நாம் பூரணமாக அறியவில்லையென்று நீ கூறுகிறாயா?

**விடை:** ஆம்! கடிகாரத்தின் அமைப்பை நமக்குத் தெளிவாக விளக்கி கூற முடியும். பிரபஞ்ச அமைப்பைத் தெளிவாக விளக்கிக் கூற முடியாது

**வினா:** இந்த வாதத்தைப்பற்றி வேறு ஏதாவது சொல்ல வேண்டிய துண்டா?

**விடை:** கடிகாரத்தைப் பார்த்தவுடன் அதை உண்டு பண்ணியவன் ஒருவன் இருக்கவேண்டுமென்று சொல்ல முடியாது.

**வினா:** வேறு என்ன?

**விடை:** உலகத்தை உண்டுபண்ணியவன் ஒருவன் உண்டென்று ஒப்புக்கொண்டாலும், உலகத்தைச் சிருஷ்டித்தவன் ஒருவன் இருப்பதாக நமக்கு ருசுப்படுத்த முடியாது.

**வினா:** இம்மாதிரியான சங்கடங்கள் பல இருப்பதனால், பிரஸ்தாப விஷயத்தில் நாம் கைக்கொள்ள வேண்டிய நிலை என்ன?

**விடை:** நாம் அந்தரங்க சுத்தியோடு ஆராய வேண்டும். பிடிவாதமாக எதையும் நம்பக்கூடாது. திறந்த மனத்தோடு உண்மையை அறிய முயலவேண்டும்.

**வினா:** கடவுள் என்ற பெயரை நாம் எந்தப் பொருளில் வழங்க வேண்டும்?

**விடை:** ஜீவகோடிகளின் உயர்ந்த லட்சியத்தைக் குறிக்கும் பொருளாகவே நாம் வழங்கவேண்டும்.

**வினா:** அப்படியானால் சிலரின் தெய்வங்கள் உத்தமமானவை என்றும், சிலரின் தெய்வங்கள் மோசமானவை என்றும் ஏற்படாதா?

**விடை:** ஆம்! நிச்சயமாக ஏற்படும். ஒவ்வொரு மனிதனும் அவனவன் லட்சியத்துக்கும், கடவுளுக்கும் அளவு கோலாக இருக்கிறான்.

**வினா:** மேலும் கொஞ்சம் விளக்கு!

**விடை:** நமது கண் பார்வை எட்டும் அளவுக்கே நமக்குப் பார்க்க முடியும். அதுபோல் நமது மனோ சக்திக்கு இயன்ற அளவிலேயே நமக்குச் சிந்திக்கவும், விரும்பவும் முடியும்.

**வினா:** அப்படியானால் கடவுளைச் சிருஷ்டித்தது யார்?

**விடை:** ஒவ்வொருவனும் தன் கடவுளைச் சிருஷ்டித்துக் கொண்டான்.

■

# கடவுள் பற்றி பெரியார்

பல கடவுள்களையும் உருவக் கடவுள்களையும் கற்பித்துக்கொண்டவனும் மனிதனை, மனிதத் தன்மையையேதான் கடவுளாக ஆக்கிக்கொண்டான் என்றாலும், இவன் (பல கடவுள்காரன்) அயோக்கியத் தனத்தையும் இழிகுணத் தன்மையையும் கொண்ட மனிதனைத்தான் கடவுளாகக் கற்பித்துக்கொண்டான்; ஏனென்றால் பல கடவுள்கள், உருவக் கடவுள்களைக் கற்பித்துக்கொண்ட மனிதன் காட்டுமிராண்டியாய், மூர்க்கனாய், மடையனாக, ஒழுக்கம், வரைமுறை என்பதே ஏற்படாதவனாய் இருந்த காலத்தில் கற்பித்துக் கொண்டதால் அன்றைய நிலைக்கு ஏற்ற பொருந்திய, விளங்கிய தன்மைகளையும் கொண்டே கற்பித்துக் கொள்ள வேண்டியவனாவான்.

உதாரணமாக பார்ப்பான் துவக்கத்தில் கடவுள், கடவுள் தன்மை என்பதாக எதையும் கற்பித்துக் கொள்ளவில்லை, ஏனென்றால் அந்தக்காலத்தில் அவன் மலைவாசியாக இருந்தான். ஆனதால் அவன் “ஆகாயத்தில் மறைவாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கிற” பல தேவர்களைக் கற்பித்துக்கொண்டான். இவர்களையும் மிகக் கீழ்த்தரமான மனிதத்தன்மை கொண்டவர்களாகவே கற்பித்துக் கொண்டான்.

**- தந்தை பெரியார்**

9 789380 826684

நன்கொடை : ரூ.25/-